# மெட்ரோ ரயிலில் 2 லட்சம் பேர் இலவச பயணம்




சென்னை, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தை பார்வையிட வந்த, வாய் பேச முடியாத மற்றும் காது கேளாத மாணவ – மாணவியர்.

சென்னை, பிப். 13–

மூன்றாம் நாளாக நேற்றும், பள்ளி, கல்லூரி மாணவ – மாணவியர், பொதுமக்கள் என, இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர், மெட்ரோ ரயிலில் இலவச பயணம் மேற்கொண்டனர்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., சென்ட்ரல் வழியாக வண்ணாரப்பேட்டை வரை, 10ம் தேதி, பிரதமர் மோடி மெட்ரோ ரயில் சேவையை துவக்கி வைத்தார்.

இதனையொட்டி, அன்று மாலை, 6:00 மணி முதல், மெட்ரோ ரயிலில், பயணியர் இலவசமாக செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனால், மெட்ரோ ரயிலில், மூன்று நாட்களாக, பயணியர் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

மாலை நேரங்களில், கூட்டம் இன்னும் அதிகரித்ததால், சில நிலையங்களில், ரயில் ஒரு நிமிடம் வரை, நின்று சென்றது. பள்ளி, கல்லூரி மாணவ – மாணவியர், அதிகளவில் பயணம் செய்தனர்.

ஆசியாவிலேயே, மிகப் பெரிய மெட்ரோ ரயில் நிலையமான, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தை, பள்ளி மாணவ – மாணவியர், பொது மக்கள், ஆச்சரியத்துடன் சுற்றிப்பார்த்தனர்.

விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் வரை, மெட்ரோ ரயிலில் இலவச பயணத்தில், நேற்று முன்தினம், இரண்டு லட்சம் பயணியர் பயணித்துள்ளனர்.

நேற்று, ரயில் போக்குவரத்தில் தாமதம் ஏதும் இல்லை என்பதால், இரண்டரை லட்சம் பயணியர் வரை பயணம் செய்திருக்கலாம்.

இலவச பயணம் காரணமாக, மண்ணடி, வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையங்களில் நேற்று, பயணியர் நெருக்கடி அதிகரித்தது. கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல், அதிகாரிகள் திணறினர்.

மாலையில், மெட்ரோ நிலையங்களில், கட்டுக்கடங்காத கூட்டம் இருந்தது.

மண்ணடி மற்றும் வண்ணாரப்பேட்டை நிலையங்களில், பயணியர் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல், மெட்ரோ ஊழியர்கள் திணறினர்.

ஒருகட்டத்தில், பொது மக்களை கட்டுப்படுத்த முடியாமல், நிலையங்களை, தற்காலிகமாக மூட, உத்தரவு தரக்கோரி, அதிகாரிகள், கோயம்பேடில் உள்ள கட்டுப்பாட்டு அறை அதிகாரிகளிடம் பேசினர்.

இதையடுத்து, வண்ணாரப்பேட்டை மற்றும் மண்ணடி நிலையத்திற்கு, கூடுதல் ஊழியர்கள் அனுப்பப்பட்டு, கூட்டம் கட்டுப்படுத்தப்பட்டது. மெட்ரோ ரயில் போக்குவரத்து, இரவு வரை தொடர்ந்தது.

## மாணவர்களுக்கு, 'சீசன் டிக்கெட்!'

ரயிலில் பயணம் செய்த, கல்லூரி மாணவர்களுக்கு, மெட்ரோ ரயிலில், சலுகை கட்டணத்தில், மாதாந்திர சீசன் பாஸ் வழங்க வேண்டும். வண்ணாரப்பேட்டை பகுதியில் இருந்து, நிறைய மாணவ – மாணவியர், தேனாம்பேட்டை, சைதாப்பேட்டை, கிண்டி, மீனம்பாக்கத்தில் உள்ள கல்லூரிகளில் படிக்கின்றனர். சலுகை கட்டணத்தில், சீசன் டிக்கெட் வழங்க, நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அவர்கள் வலியுறுத்தினர்.

## 'புரளி கிளப்பாதீர்'

'பொதுமக்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு, விரைவாக சென்று வர, மெட்ரோ ரயில் போக்குவரத்து, பெரிதும் உதவியாக உள்ளது. நவீன தொழில்நுட்பம், உயர்ரக பாதுகாப்புடன் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

'மெட்ரோ ரயில் போக்குவரத்து குறித்து, புரளி கிளப்பாதீர். நிர்வாகம், பயணியருக்கு, 100 சதவீதம் பாதுகாப்பான பயணம் வழங்குவதே நோக்கமாக கொண்டுள்ளது' என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.